View metadata, citation and similar papers at core.ac.uk
brought to you by CORE
provided by UUM Repository

| | | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 20 Jan 2012 | Color | Black/white |
| Section | News | Circulation | 45,000 |
| Page No | 2 | Readership | 124,000 |
| Language | Tamil | ArticleSize | 206 cm² |
| Journalist | N/A | AdValue | RM 400 |
| Frequency | Daily | PR Value | RM 1,199 |



# கற்பழித்து கொலை செய்து விட்டு தப்பியோடியவன் 6 ஆண்டுகளுக்குப் பின் பிடிபட்டான்

**சுங்கைப்பட்டாணி, ஜன. 20-** இளம் பெண்களை கொடூரமாக கற்பழித்துக் கொன்றவன் ஆறு வருடமாக காத்திருந்த போலீசாரின் கையில் சிக்கிக் கொண்டான்.

கடந்த செவ்வாய்க்கிழமை கேஎல்ஐஏ விமான நிலையத்தில் வந்திறங்கிய அவனை போலீசார் கைது செய்து மாஜிஸ்திரேட் நீதிமன்ற ஆணையைப் பெற்று 7 நாள் தடுப்புக் காவலில் தடுத்து வைத்துள்ளனர்.

கடந்த 15.1.2006இல் தாமான் ரியா ஜெயாவில் ஓட்டப்பயிற்சி மேற்கொண்டிருந்த 25 வயது சந்தை அதிகாரி சீ காய்ப் யாப் கற்பழித்து கத்தியால் பல தடவை குத்தப்பட்டு இறந்திருக்கிறார்.

30 வயது மதிக்கத்தக்க அந்த சந்தேக நபர் ஆஸ்திரேலியாவின் நிரந்தர குடியுரிமையை பெற்றிருக்கிறான். அவனுடைய மரபணுவும் பாதிப்புக்குள்ளானவரின் மேல் இருந்த மரபணுவும் ஒத்திருந்ததால் கடந்த 2006ஆம் ஆண்டு முதற்கொண்டு போலீசாரால் தேடப்படுபவர்களின் பட்டியலில் இருந்து வந்துள்ளான்.

சம்பவ நாளன்று போலீசார் அவனுடைய வீட்டை சென்றடைவதற்குள் அவன் நாட்டை விட்டே ஓடிவிட்டான்.

அவன் கைது செய்யப்பட்டதை கெடா போலீஸ் குற்றப் புலனாய்வுத் துறை தலைவர் துணை ஆணையர் ஸக்காரியா அகமட் உறுதிப்படுத்தினார்.

இந்த படுகொலை வழக்கு மூடப்படவில்லையென்றும் 2 மாதத்திற்கு ஒரு முறை மீள் பார்வைக்கு உள்ளாகி வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டிற்குள் நுழையும் எல்லா இடங்களிலும் விமான நிலையங்களில் உள்ள அதிகாரிகளுடன் நாங்கள் ஒன்றிணைந்து செயலாற்றி வந்துள்ளோம். இந்த கைது மூலம் வழக்கை ஒரு முடிவுக்கு கொண்டு வருவோம்.

யூயூஎம் எனப்படும் வடமலேசிய பல்கலைக்கழக மாணவியான சீ காய்ப் யாப் பின் தொடரப்பட்டு, கடத்தப்பட்டு வேறோர் இடத்தில் கற்பழித்து கொலை செய்யப்பட்டு குடியிருப்புப் பகுதியில் போடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

12 பேர் இந்த வழக்கு தொடர்பாக விசாரிக்கப்பட்டு எந்த ஆதாரமும் இல்லாததால் விடுவிக்கப்பட்டனர்.

இந்த கைது நடவடிக்கைக்காக இவ்வளவு காலம் காத்திருந்ததாகவும் இறுதியில் நீதி நிலைநாட்டப்படும் என்றும் கூறிய பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை ஆ சாவ் (வயது 56) போலீசின் நடவடிக்கையை வெகுவாகப் பாராட்டினார்.

Powered by: MediaBanc
Be informed